# பின்னிணைப்பு 1

# முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும்[1]

## நாணயக்கொள்கை

2019 பெப்புருவரி 22 - உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீது பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதமானது 2019 மார்ச்சு 01இல் ஆரம்பிக்கப்படுகின்ற ஒதுக்கு பராமரிப்பு காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 6.00 சதவீதத்திலிருந்து 5.00 சதவீதத்திற்கு 1.00 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டுள்ளது.

2019 மே 31 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப்புள்ளிகளினால் முறையே 7.50 சதவீதத்திற்கும் 8.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

2019 ஓகத்து 23 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.00 சதவீதத்திற்கும் 8.00 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

## நிதியியல் துறை

### உரிமம் பெற்ற வங்கிகள்

2019 சனவரி 04 - இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளில் வெளிநாட்டினரை பணிக்கமர்த்துவது குறித்த வழிகாட்டல்களை தெரிவிக்கும் சுற்றறிக்கையொன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வெளியிடப்பட்டதுடன், இது தொடர்பாக வழங்கப்பட்ட முந்தைய சுற்றறிக்கை இரத்துச்செய்யப்பட்டது.

2019 சனவரி 18 - புதிய கணக்கீட்டு நியமங்களுக்கமைய தற்போதுள்ள அறிக்கையிடல் வடிவங்களை மாற்றி புதிய நிதி அறிக்கைகளின் வடிவங்களைக் குறிப்பிட்டு, வருடாந்த மற்றும் காலாண்டு நிதிநிலை அறிக்கைகள் மற்றும் பிற வெளிப்பாடுகளை வெளியிடுவது குறித்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஒரு சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2019 மார்ச்சு 07 - உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட குறைந்தபட்ச எல்லைத் தேவைப்பாடுகளை மீளப்பெறுவதற்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

2019 மார்ச்சு 12 - ஏற்பு நியதி ஆவணங்களின் கீழ் இறக்குமதிக்கெதிரான எல்லை வைப்புத் தேவைப்பாடுகள் குறித்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மீளப்பெறப்பட்டது.

2019 மார்ச்சு 13 - நிதியியல் சாதனங்கள்/ சேவைகளின் பண்புகளை பாதிக்கும் வகையில் அதிஷ்டலாபத் திட்டங்கள்/ குலுக்கல் ரீதியான திட்டங்கள் மற்றும் பரிசுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலிருந்து உரிமம்பெற்ற வங்கிகளை தடுப்பது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. மேலும், பருவகால ரீதியான/ விளம்பர ரீதியான பரிசுத் திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நிபந்தனைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

2019 ஏப்பிறல் 18 - சலுகை நிபந்தனை அனுமதியின் கீழ் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களை திறப்பதற்கான கட்டுப்பாடுகளின் நீக்கத்தை அறிவிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

2019 ஏப்பிறல் 26 - துணைநில் வைப்பு வசதி வீதத்தினை அடிப்படையாகக் கொண்ட சேமிப்பு மற்றும் மூன்று மாதங்களுக்கு குறைவான காலப்பகுதிக்குரிய அல்லது முதிர்ச்சிக்காலம் குறிப்பிடப்படாத வைப்புக்களுக்கான வட்டிவீதம் மற்றும் 364 நாட்களுக்குரிய திறைசேரி உண்டியல் வீதத்தினை அடிப்படையாகக் கொண்ட மூன்று மாதங்கள் அல்லது அதற்கு அதிகமான காலப்பகுதிக்குரிய தவணை வைப்புக்களின் வட்டி வீதங்களைக் கொண்ட இலங்கை ரூபா வைப்புக்களுக்கான உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்படும்

1 இது 2019 சனவரி தொடக்கம் ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்களையும் வழிமுறைகளையும் அதேபோன்று 2019இன் எஞ்சிய காலப்பகுதியில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள கொள்கை வழிமுறைகளையும் உள்ளடக்குகின்றது.

| | | |
|---|---|---|
| | | அல்லது செலுத்தப்படக்கூடிய அதிகபட்ச வட்டி வீதங்களை விதிக்கும் முகமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு நாணய விதிச் சட்டக் கட்டளையொன்று வெளியிடப்பட்டது. |
| | - | 2019 சனவரி 01 முதல் 2020 யூன் 30 வரையிலான இடைக்காலப் பகுதியில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கொடுகடனை அதிகரிக்கும் நோக்கில் குறிப்பிட்ட வழிமுறைகளைக் (இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் பெற்ற 09 இனை பின்பற்றுவது தொடர்பாக) உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கும் முகமாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| | - | பாசல் III கட்டமைப்பின் கீழ் மூலதன மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுள்ள சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை அடையாளம் காணப்பதற்கான ஒழுங்குமுறை தேவைப்பாடுகளை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கிச் சட்ட பணிப்புரைகள் வெளியிடப்பட்டது. |
| 2019 மே 08 | - | 2019 ஏப்பிறல் 18இல் உள்ளவாறான வெளிநின்ற கொடுகடன் வசதிகள் தொடர்பான 2020 மாச்சு 31 வரை தொழிற்படு கடன்களுக்களுக்கான விடயங்கள் அடிப்படையில் (கடன் மற்றும் வட்டி) இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அல்லது சுற்றுலா துறையுடன் தொடர்புபட்ட சேவைகளை வழங்கும் ஏனைய சபை/ நிறுவனத்துடன் பதிவுசெய்த தனிநபர்கள் மற்றும நிறுவனங்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்கள் இயலுமைப்படுத்தும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2019 மே 31 | - | மென்பார வண்டிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் 70 சதவீதத்திலிருந்து 90 சதவீதத்திற்கு அதிகரிப்பதன் மூலம் உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன்விகிதம் மீதான வங்கித்தொழில் சட்டம் பணிப்புரை இல.01 இனை திருத்தும் வகையில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழில் சட்டப்பணிப்புரைகள் வழங்கப்பட்டது. |
| 2019 யூன் 28 | - | "என்டப்பிறைஸ் சிறிலங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் சிறிய வாடகைக் கார் கடன் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் பதிவு செய்யப்படாத இலத்திரனியலற்ற மோட்டார் கார்களுக்கு 80 சதவீத பெறுமதிக்கான கடன் விகிதம் பிரயோகிக்கப்படுமென அறிவிக்குமுகமாக வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை வெளியிப்பட்டது. |
| 2019 யூலை 18 | - | பாசல் III இன் கீழ் மூலதன தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளின் நியதிகளில், மூலதனம் மற்றும் இடர்நேர்வு நிறைவேற்றப்பட்ட சொத்துக்களின் கணிப்புடன் இசைந்து செல்வதனை உறுதிப்படுத்துவதற்காக பாசல் III இன் கீழான மூலதனப் போதுமை விதத்தினை இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 உடன் இணைக்கும் பொருட்டு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விளக்கக் குறிப்பொன்று விடுக்கப்பட்டது. |
| | - | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்காக பாசல் III இன் கீழ், முடுக்கி விகிதம் தொடர்பான 2018ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளுக்கான விளக்கங்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விளக்கக் குறிப்பொன்று விடுக்கப்பட்டது. |
| 2019 ஓகத்து 29 | - | இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளின் சந்தை நடத்தை மற்றும் திறைசேரி தொழிற்பாடுகள் தொடர்பில் சந்தை நடத்தை மற்றும் ஒழுக்கவியல் நடவடிக்கைகள், இரகசியத்தன்மைத் தேவைப்பாடுகள், வணிகம் தொடர்பான உரையாடல்களைப் பதிவுசெய்வதற்கான நடைமுறைகள், இடர்நேர்வு முகாமைத்துவங்கள் தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் அறிவுமட்டம் மற்றும் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகாமைக்கான தடைகள் என்பனவற்றை உள்ளடக்கிய வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டன. |

2019 செத்தெம்பர் 06 - தனியான முதனிலை வணிகர்களுக்காக நேர்மாற்று மீள்கொள்வனவு நடவடிக்கைகள் மூலமான திரவத்தன்மை துணை வசதியொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

- திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ் மத்திய வங்கியால் நடத்தப்படுகின்ற திறைசேரி முறிகளின் உடனடி ஏலங்களை (விற்பனை/கொள்வனவு) அறிவிக்குமுகமாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

- திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நடத்தப்படுகின்ற திறைசேரி உண்டியல்/ முறிகளின் உடனடி விற்பனை/ கொள்வனவு ஏலங்களில் தனியான முதனிலை வணிகர்கள் பங்குபற்றுவதை அனுமதிக்கும் முகமாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

2019 செத்தெம்பர் 24 - உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி தொடர்பான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணய விதிச் சட்டக்கட்டளை இரத்துச் செய்யப்பட்டது.

- ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட சந்தைக் கடன் வழங்கல் வீதங்களுக்கான அண்மைய கொள்கைத் தீர்மானங்களை ஊடுகடத்தும் வினைத்திறனை உயர்த்துவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு நாணய விதிச் சட்ட கட்டளையொன்று விடுக்கப்பட்டது. இதன்படி, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்களை இலக்கிடப்பட்ட திகதிகளுக்குள் குறைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. மேலும், கொடுகடன் அட்டை முற்பணங்கள், முன்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் மற்றும் செலுத்தவேண்டிய காலப்பகுதியின் அனுமதிக்கபட்ட எல்லையின் மிகைத் தொகைக்கு அல்லது நிலுவைகளுக்கான தண்டவட்டிவீதங்கள் என்பனவற்றின் மீது உச்சபட்ச வட்டிவீதம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இனிவரவிருப்பவை - புதிய வங்கிச் சட்டத்தின் வரைவு

- கம்பனி ஆளுகையின் கீழ் தகுதி மற்றும் பொருத்தப்பாட்டு மதிப்பீட்டு நிபந்தனைகளை வலுப்படுத்தல்
- உரிமம்பெற்ற வங்கிகளுக்கான புதிய பங்குரிமையாளர் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.
- உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மீட்புத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- தகுதிவாய்ந்த கணக்காய்வாளர்களின் பட்டியலைத் திருத்துதல்.
- உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளை அடையாளம் காண்பதற்கான கட்டமைப்பை உருவாக்குதல்.
- இணையப் பாதுகாப்பு மற்றும் வங்கித்தொழிற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கலுக்கான கொள்கைக் கட்டமைப்பை நிறுவுதல்.
- நிலைத்திருக்கக்கூடிய நிதியை நோக்கி வங்கித்துறை முன்னெடுப்புக்களை வசதிப்படுத்தல்.

## உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்

2019 மாச்சு 01 - 2000ஆம் ஆண்டு 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் நிறுவனமாகிய நியூவஸ்ட் கப்பிடல் லிமிடெட் இனுடைய பதிவு இரத்துச் செய்யப்பட்டது. இந்நிறுவனம் இன்னுமொரு உரிமம்பெற்ற நிதி நிறுவனம் ஒன்றினால் பெறப்பட்டது.

2019 மாச்சு 06 - உரிமம்பெற்ற நுண்பாக நிதி நிறுவனங்கள், பிணை வைப்புக்கள் தவிர்ந்த ஏனைய வைப்புக்களை ஏற்பதைக் கட்டுப்படுத்துவதற்காக வைப்புக்கள் மீதான பணிப்புரையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2019 ஏப்பிறல் 26 | - | வாடிக்கையாளர்கள் அளவுக்கதிகமான வட்டி வீதங்களினால் பாதிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன், உரிமம் பெற்ற நுண்பாக நிதி நிறுவனங்களினால் வழங்கப்படும் கடன்களின் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதங்களின் மீது பணிப்புரை அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2019 ஏப்பிறல் 29 | - | உரிமம் பெற்ற நிதி நிறுவனங்கள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் நிறுவனங்களின் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை அறிமுகப்படுத்துவதற்கு பணிப்புரையொன்று வெளியிடப்பட்டது. |
| 2019 மே 15 | - | உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களின் சொத்துரிமையை பன்முகப்படுத்தும் நோக்கில் உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களில் சொத்துரிமை வரையறைகளை அறிமுகப்படுத்தல் பற்றிய ஆலோசனைப் பத்திரம் வழங்கப்பட்டது. |
| 2019 மே 21 | - | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை அல்லது சுற்றுலாத் துறையுடன் தொடர்புபட்ட சேவைகளை வழங்கும் ஏனைய சபை/ நிறுவனத்துடன் பதிவுசெய்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்களை இயலுமைப்படுத்தும் விதத்தில் உரிமம்பெற்ற நிதி நிறுவனங்களுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2019 மே 31 | - | 2019ஆம் ஆண்டு மே 31ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் முதன்மை வணிகர் கம்பனி ஒன்றான நட்வெல்த் செகியுரிடீஸ் லிமிடெட்டின் வியாபார தொழிற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் ஆறுமாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்பட்டது. |
| | - | அதிவிசேட வர்த்தமானி இல. 2125/58இன் கீழ், உரிமம் பெற்ற நிதி நிறுவனமொன்றை ஒடுக்குவதிலான முன்னுரிமையான உரிமைக் கோரிக்கைகள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டது். |
| 2019 யூன் 04 | - | 2019இன் வரவுசெலவு திட்டமுன்மொழிவை உள்ளடக்குமாறு இலகு பார ஊர்திகளுக்கு அதிகரித்த கடன் விகிதங்களை வழங்குவதற்கு அனுமதித்து உரிமம்பெற்ற நிதி நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்ட பெறுமதிக்கான தற்போதைய கடன் விகித பணிப்புரை திருத்தப்பட்டது. |
| 2019 யூலை 10 | - | ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட் மற்றும் சிங்கபுத்திர பினான்ஸ் பிஎல்சி ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களை இரத்துச் செய்வதற்கான முன்னறிவித்தல்கள் வழங்கப்பட்டன. |
| 2019 செத்தெம்பர் 19 | - | சிங்கபுத்திர பினான்ஸ் பிஎல்சி இனால் வழங்கப்பட்ட மூலதன அதிகரிப்புத் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு நாணயச் சபை முடிவெடுத்தது. |
| | - | 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட் இனுடைய உரிமம் இரத்துச் செய்யப்பட்டது. |
| 2019 செத்தெம்பர் 26 | - | கடன் வழங்குதல் மற்றும் நுண்பாக நிதித் வியாபாரங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தலுக்காக நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட நுண்பாக நிதிய மற்றும் கடன் ஒழுங்குமுறை அதிகாரச் சட்டம் நிதி அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | உரிமம்பெற்ற நிதி நிறுவனங்களைப் பலப்படுத்துவதற்காக 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்திற்குத் திருத்தங்களை அறிமுகப்படுத்தல். |
| | - | "இலங்கை கணக்கீட்டு நியமம் 9: நிதியியல் சாதனங்களிற்கு" இயைவாகுமாறு உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களின் கடன் வசதிகளை வகைப்படுத்துதல் மற்றும் அளவிடுவதுடன் இசைந்து செல்லும் ஒரு முன்மதியுடைய வழிகாட்டலை வெளியிடும் நோக்கத்தில் ஒதுக்கு ஏற்பாடுகள் மீதான தற்போதைய பணிப்புரை திருத்தப்படவுள்ளது. |

- கம்பனி ஆளுகை மீதான தற்போதைய பணிப்புரை திருத்தப்படவுள்ளது.

- அனைத்து நேரடி வணிக பங்கேற்பாளர்களுக்கும் பங்குச் சான்றிதழ் இல்லாத திறைசேரி உண்டியல்கள் மற்றும் பங்குச் சான்றிதழ் இல்லாத திறைசேரி முறிகள் மீதான நேரடி வணிக பங்கேற்பாளர்களின் (உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் முதன்மை வணிகர்கள்) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு நடவடிக்கைகள் மீதான புதிய பணிப்புரையொன்று வெளியிடப்படவுள்ளது.

## காப்புறுதி

2019 பெப்புருவரி 24 - நீண்டகால காப்புறுதி வழங்குனர்களுக்கு கோரப்படாத எவையேனும் நன்மைகளை ஆயுள் நிதியத்தின் இலாபங்களாக கருத்திற்கொள்ளாமல் இருப்பதற்கு கோருகின்ற பணிப்புரையொன்று இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது.

2019 பெப்புருவரி 25 - தனியான மருத்துவக் காப்புறுதி ஒப்பந்தங்களை வழங்குதல் தொடர்பான விடயங்களைத் தீர்ப்பதற்கு நீண்டகால காப்புறுதி வழங்குநர்களுக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது.

2019 பெப்புருவரி 26 - ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவர் காப்புறுதி ஒப்பந்தமொன்றின் கொள்கையொன்றின் ஒப்பந்த உடைமையாளராக இல்லாதவிடத்து சில ஆயுட்காப்புறுதி செய்யப்பட்டவர்களுக்கும்/ நன்மைபெறுநருக்கு ஒப்பந்த ஆவணத்தின் பிரதியொன்று வழங்கப்படாமையினால் “ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு/ நன்மைபெறுநருக்கு ஒப்பந்த ஆவணங்களை வழங்குதல்” மீதான பணிப்புரையினை இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு திருத்தம் செய்தது.

2019 யூலை 24 - காப்புறுதி தரகர்களுக்கு குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்குவித்தல் மீதான பணிப்புரையொன்று இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது.

இனிவரவிருப்பவை - 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதி தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்திற்கு திருத்தங்களை முன்மொழிதல்.

## மூலதனச் சந்தை

2019 சனவரி 01 - பங்குத்தரகுத்தொழில் துறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்களுக்காக குறைந்தபட்ச தகைமை மட்டத்தினை உறுதிசெய்வதற்கு திருத்தப்பட்ட தகைமை கட்டமைப்பொன்று பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

2019 சனவரி - வழங்கல் எதிர் கொடுப்பனவுவின் வியாபார மற்றும் தொழிற்பாட்டு விபரக்குறிப்புகள் இறுதிப்படுத்தப்பட்டு இலாப மாதிரி மேம்படுத்தப்பட்டதுடன், நடைமுறைப்படுத்தல் செயன்முறையினைத் தொடங்குவதற்கு கொழும்பு பங்குப்பரிவர்த்தனைக்கு அறிவுறுத்தப்பட்டது.

2019 சனவரி 25 - பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் தலைவரினதும் இரட்டை இயல்பினை நடைமுறைப்படுத்துவதற்கு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் நிறுவன ஆளுகைக்கட்டமைப்பு திருத்தம் செய்யப்பட்டது.

2019 யூன் 21 - அரசுக்கு சொந்தமான வங்கிகளின் எதிர்பாரா மாற்று உரிமைகளின் பட்டியலிடலுக்கான பாசல் III அனுமதியளித்தல் கட்டமைப்பினை வகுத்தல் பூரணப்படுத்தப்பட்டது.

இனிவரவிருப்பவை - கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் நிறுவனங்களின் ஆரம்ப பட்டியலிடலை ஆளுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் கொள்கையொன்றினை வகுத்தல்

- கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பரஸ்பரமற்றமயமாக்கலுக்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பிணையங்கள் பரிவர்த்தனை சட்டத்தினை திருத்துதல்.
- சந்தை இடைத்தரகர்களுக்கான மத்திய இணைத்தரப்பு பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கையினை இறுதிப்படுத்தல்.

## சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி

2019 யூலை 01 - தொழில்முயற்சி இலங்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் திட்டங்களான “ரண் அஸ்வென்ன”, “கொவி நவோத்”, “ஜெய இசுறு”, “திரி சவிய”, “தொழிற்படு மூலதனம்” மற்றும் “பசுமைக் கடன்” என்பனவற்றின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு, மத்திய வங்கியூடாக அரச உத்தரவாதங்களை வழங்குவதற்காக புதிய கொடுகடன் உத்திரவாதத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் நிருவாக உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டது.

2019 யூலை 30 - சிறுவுடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுகடன் கூறினை மீளமைப்புச் செய்வதனை இயலுமைப்படுத்துவதற்காக, நிருவாக உடன்படிக்கையின் இரண்டாவது பிற்சேர்க்கை இலங்கை அரசாங்கத்துடன் கையொப்பமிடப்பட்டது.

2019 ஓகத்து 05 - தற்போதுள்ள சிறுவுடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டங்களின் மீளப்பெயரிடுதல் மற்றும் திருத்துதல் என்பனவற்றின் மூலம் ஐந்து புதிய கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

## கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

2019 பெப்புருவரி 26 - இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்கள்/ பொறிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்கு அதேநேர அறிவித்தல்களை வழங்குவதற்கு நிதியியல் நிறுவனங்களை அறிவுறுத்துகின்ற 2019 இன் 01ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

2019 மாச்சு 11 - வருவாய் பரம்பலை சீரமைக்கும் பொருட்டு உள்நாட்டு நாணயக் கொடுப்பனவுகளுக்காக தேசிய துரித பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுவதன் மீதான 2018 இன் 6ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சுற்றறிக்கையினைப் பதிலீடு செய்கின்ற உள்நாட்டுக் கொடுப்பனவுகளுக்கான தேசிய துரித பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுவதற்கான 2019இன் 2ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

## பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

2019 மே 13 - “இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை” இன் அடிப்படையில் தற்பொழுது இடம்பெற்று வரும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்வதற்கு காப்புறுதியாளர்களாக நீண்டகாலம் காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்காக இல.2123/14 கொண்ட அதிவிசேட வர்த்தமானி வெளியிட்டது.

2019 மே 23 - 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகளின் கீழ், அரசல்லா நிறுவனங்கள், இலாபநோக்கற்ற நிறுவனங்கள் அல்லது அறக்கொடை நிறுவனங்கள் தொடர்பில் மேம்பட்ட வாடிக்கையாளர் விழிப்புக் கவனத்தினை மேற்கொள்வதன் மீதான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றிக்கையொன்று விடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | - | 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 4(7)ஆம் ஒழுங்குவிதியின் கீழ், குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் பட்டியலுக்கு திருத்தங்களை உட்புகுத்துவதற்காக இல. 2124/32 கொண்ட அதிவிசேட வர்த்தமானி பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டது. |
| 2019 ஓகத்து 22 | - | குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்காக சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வழிகாட்டல் வெளியிடப்பட்டது |
| 2019 செத்தெம்பர் 02 | - | குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான பயன்பெறுநர் சொத்துடமையை அடையாளம் காண்பது தொடர்பாக 2019ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வழிகாட்டல் வெளியிடப்பட்டது |
| 2019 செத்தெம்பர் 09 | - | 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 4(7)ஆம் ஒழுங்குவிதியின் கீழ், குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் பட்டியலுக்கு திருத்தங்களை உட்புகுத்துவதற்காக இல. 2140/16 கொண்ட அதிவிசேட வர்த்தமானி பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டது. |
| 2019 ஒத்தோபர் 01 | - | நிதியியல் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்திற்கான அரசியல் ரீதியாக பிரச்சனைகளை எதிர்கொள்ளும் ஆட்களை அடையாளம் காண்பது தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வழிகாட்டல் வெளியிடப்பட்டது. |

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 2019 பெப்புருவரி 27 | - | வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பான ஏதாவது கொடுப்பனவுகள் மேற்கொள்ளல் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினை அனுமதிக்கின்ற 2112/17 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2019இல் வெளியிடப்பட்டிருந்தது. |
| 2019 பெப்புருவரி 28 | - | தொடர்புடைய நிரல் அமைச்சுக்களினதும் தொடர்புடைய ஏனைய எந்தவொரு அதிகாரிகளினதும் அங்கீகாரத்திற்கு உட்பட்டு இலங்கை அரசாங்கத்திற்கும், அரசுக்கு சொந்தமான 50 சதவீதத்திற்கும் கூடுதலான மூலதனப் பங்குகளைக் கொண்ட இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கும் கடன் பெறுகைகளை கடன் வழங்குநரின் உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகப் பெற்றுக்கொள்ளாது குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் இலங்கைக்கு வெளியிலிருந்து கடனை பெற்றுக்கொள்வதனை அனுமதிக்கின்ற 2112/25 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டது. |
| 2019 மாச்சு 26 | - | முற்பணக்கொடுப்பனவு நியதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளின் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக இலங்கை ரூபாவின் பரிமாற்றத்தில் ஈடுபடுகின்ற பொருட்கள் இறக்குமதியாளர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்குவதனை மட்டுப்படுத்துகின்ற பணிப்புரைகளின் மீள்பெறுகையினை அவர்களுக்கு அறிவிக்கின்ற பணிப்புரைகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2019 ஒத்தோபர் 17 | - | பொருட்கள் ஏற்றுமதியாளர்கள் அவர்களின் ஏற்றுமதி பெறுகைகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு வேண்டப்படும் காலப்பகுதியினை ஏற்றுமதி திகதியிலிருந்து 120 நாட்களில் இருந்து 180 நாட்களாக நீடிக்கும் இல. 2145/49 கொண்ட அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. |

## விலைத்திருத்தங்கள்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறுதிருத்தம்செய்யப்பட்டன:

| திகதி | பெற்றோல் (ரூ. லீற்றரொன்றுக்கு) | | தன்னியக்க டீசல் (ரூ. லீற்றரொன்றுக்கு) | சிறப்பு டீசல் (ரூ. லீற்றரொன்றுக்கு) |
|---|---|---|---|---|
| | 92 ஒக்ரேன் | 95 ஒக்ரேன் | | |
| 11.01.2019 | 123 | 147 | 99 | 118 |
| 12.02.2019 | 129 | 152 | 103 | 126 |
| 13.03.2019 | 132 | 159 | 104 | 134 |
| 11.05.2019 | 135 | 164 | 104 | 134 |
| 11.06.2019 | 138 | 164 | 104 | 136 |
| 11.07.2019 | 136 | 159 | 104 | 131 |
| 14.08.2019 | 138 | 163 | 104 | 134 |
| 11.09.2019 | 137 | 161 | 104 | 132 |
| 11.10.2019 | 137 | 161 | 104 | 132 |

## வரித்திருத்தங்கள்

### பிடித்துவைத்தல் வரி[2]

இனிவரவிருப்பவை

- எவரேனும் வதிகின்ற ஆளுக்கு மேற்கொள்ளப்படுகின்ற, மாதமொன்றுக்கு ரூ.50,000 விஞ்சாத வேத்துரிமை கொடுப்பனவு மீது ஒவ்வொரு மதிப்பீட்டு ஆண்டுக்காகவும் ரூ.500,000 இற்கு உட்பட்டு பிடித்து வைத்தல் வரியை விலக்களித்தல்.
- எவரேனும் வதிகின்ற ஆளுக்கு மேற்கொள்ளப்படுகின்ற மாதமொன்றுக்கு ரூ.50,000 விஞ்சாத வாடகைக் கொடுப்பனவு மீது ஒவ்வொரு மதிப்பீட்டு ஆண்டுக்காகவும் ரூ.500,000 இற்கு உட்பட்டு பிடித்து வைத்தல் வரியை விலக்களித்தல்.

### பொருளாதார பணிக் கட்டணம்[2]

இனிவரவிருப்பவை

- பொருட்கள் அல்லது பணிகள் ஏற்றுமதியில் இருந்து தோன்றுகின்ற புரள்வு மீது ஏற்புடைய பொருளாதார பணிக்கட்டணத்தை 0.50 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதமாகக் குறைத்தல்
- நாட்டின் பொருளாதார நன்மையினைக் கருத்திற் கொண்டு நிதியமைச்சினால் குறித்துரைக்கப்பட்டவாறான எவையேனும் மூலதனப் பொருட்கள் தவிர்ந்த ஏதேனும் பொருளின் அல்லது பண்டத்தின் இறக்குமதி மீது 0.50 சதவீதம் கொண்ட வீதத்தில் பொருளாதாரப் பணிக் கட்டணத்தினை விதித்தல்.

### வருமான வரி விலக்களிப்புகள்[3]

இனிவரவிருப்பவை

- உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட ஏதேனும் நாட்டுக்கான முறி மீது ஏதேனும் வதியாத ஆளின் மூலமான உழைப்புகள்.
- இலங்கை அபிவிருத்தி முறிகள் உள்ளடங்களாக வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட நாட்டிற்கான முறிகள் மீது எவரேனும் வதிகின்ற ஆளினால் உழைக்கப்பட்ட வட்டி வருமானம்
- வதியாதோர் வெளிநாட்டு நாணய மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணய கணக்குகள் மீது எவரேனும் ஆளினால் உழைக்கப்பட்ட வட்டி வருமானம் (5 வருடங்களுக்கு)

---

2 2019 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறான

3 தனிப்பட்ட வருமான வரிகள் மற்றும் நிறுவன வருமான இரண்டிற்கும் வருமான வரி விலக்களிப்புகள் ஏற்புடையதாகும் மற்றும் 2019 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறான விலக்களிப்புகள்

- நிதி நிறுவனங்களில் பேணப்படுகின்ற ஏதேனும் வைப்புக் கணக்கு தொடர்பில் 18 வருடங்களுக்கு குறைந்த வயதுடைய பிள்ளைகளினால் உழைக்கப்பட்ட மாதத்திற்கு ரூபா 5,000 வரையிலான வட்டி வருமானம்

- இலங்கையிலுள்ள எவரேனும் ஆளுக்கு அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீது இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டி (வதியாத கம்பனியொன்று அதன் இலங்கையிலுள்ள உரித்துக்கம்பனிக்கு அல்லது துணைக் கம்பனிக்கு வழங்கிய கடன்களுக்கு ஏற்புடையதாகாது)

## உயர் பெறுமதி உள்நாட்டு முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை முன்னேற்றுவதற்கான முதலீட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்[4]

இனிவரவிருப்பவை - பாரியளவிலான கருத்திட்டங்களுக்கான வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் பின்வருமாறு:

| வரி அளவீடுகள் | முதலீட்டின் அளவு | | |
|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் அதிகமானது | ஐ.அ.டொலர் 100 பில்லியனுக்கும் அதிகமானது | ஐ.அ.டொலர் 50 பில்லியனுக்கும் அதிகமானது |
| முதலீட்டு தொகையின் 150 சதவீதம் வரையிலான மூலதன படிக்கொடுப்பனவு | 150 சதவீதம் மற்றும் 25 ஆண்டுகள் | 150 சதவீதம் மற்றும் 10 ஆண்டுகள் | 100 சதவீதம் மற்றும் 10 ஆண்டுகள் |
| முற்கூட்டிய வரிகளின் நீக்கம் | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி: விலக்களிப்பு | | |
| | துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை: விலக்களிப்பு | | |
| | செஸ் தீர்வை: விலக்களிப்பு | | |
| | எதிர்மறைப்பட்டியல் விடயங்கள் மீதான தீர்வை மற்றும் ஏனைய வரிகள்: எதிர்மறைப் பட்டியல் பிரயோகிக்கப்பட முடியாது | | |
| வதிவற்றோர் நபர் ஒருவருக்கு கம்பனியினால் வழங்கப்பட்ட பங்கிலாப வரி | பூச்சியம் | விபரம் கிடைக்கவில்லை | விபரம் கிடைக்கவில்லை |
| இலங்கைக்கு வெளியே தொழில்புரியும் தொழிலாளர்களின் தொழில் வருமானம் மீதான பிடித்து வைத்தல் வரி | விலக்களிப்பு | விபரம் கிடைக்கவில்லை | விபரம் கிடைக்கவில்லை |

## பெறுமதிசேர் வரி

2019 மே 21 - இலங்கைச் சுற்றுலா அபிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்த விடுதிகள், விருந்தினர் விடுதிகள், உணவகங்கள் அல்லது வேறு அதனையொத்த பணிகளை வழங்குகின்ற அதனையொத்த தொழில்களினால் வழங்கப்படும் பணிகள் மற்றும் பயண முகவர் ஒருவரினால் உள்முக சுற்றுலாப் பயணங்கள் தொடர்பில் வழங்கப்படும் பணிகள் மீதான பெறுமதி சேர் வரி ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

2019 யூன் 01 - இலங்கைச் சுற்றுலா அபிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்த விடுதிகள், விருந்தினர் விடுதிகள், உணவகங்கள் அல்லது வேறு அதனையொத்த பணிகளை வழங்குகின்ற அதனையொத்த தொழில்களினால் வழங்கப்படும் பணிகள் மற்றும் பயண முகவர் ஒருவரினால் உள்முக சுற்றுலாப் பயணங்கள் தொடர்பில் வழங்கப்படும் பணிகள் மீதான பெறுமதி சேர் வரி 2020 மாச்சு 31 வரை 5 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் அதிகரிக்கப்பட்டது.

4 2019 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு

| | | |
|---|---|---|
| 2019 ஒத்தோபர் 23 | - | ஏற்றுமதியினை சார்ந்த முதலீட்டு சபைக் கம்பனிகளினால் சில ஆடைகளின் உள்நாட்டு விற்பனையின் மீது பிரயோகிக்கத்தக்க விலை அடிப்படையில் அமைந்த பெறுமதி சேர் வரி வீதத்தினை ரூ.75 இலிருந்து ரூ.100 ஆக அதிகரித்தல். |
| | - | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி தவிட்டு எண்ணெய் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - | கட்டுமான ஒப்பந்தகாரர்களினால் அவர்களது வெளிநாட்டு கருத்திட்டங்களுக்கு பொருட்கள் வழங்குதல் ஏற்றுமதிகளாகக் கொள்ளப்பட்டது. |
| | - | கூட்டு ஆதன வீட்டலகு வழங்கல் மீதான பெறுமதி சேர் வரி 6 வீதமாகக் குறைக்கப்பட்டதுடன் அத்தகைய வழங்கலுடன் தொடர்புடைய உள்ளீட்டு வரி 5 சதவீதத்தில் கணிக்கப்பட்டது. |
| | - | கூட்டு ஆதன வீட்டலகுகள் வழங்கல் மீதான பெறுமதி சேர் வரி விலக்களிப்புகள்:<br>- கூட்டு ஆதன வீடமைப்பு கருத்திட்டமொன்றின் ஒவ்வொரு கூட்டு ஆதன வீட்டினதும் அலகுவிலை ரூ.25 மில்லியனை விஞ்சாத விடத்து,<br>- கூட்டு ஆதன வீட்டலகொன்றின் விற்பனை மீதான உடன்படிக்கை பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டத்தின் தொடக்க திகதிக்கு முன்னர் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக நிறைவேற்றப்பட்டவிடத்து |
| | - | நிறைவு பெற்று பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டத்தின் தொடக்க திகதிக்கு முன்னர் தொடர்புடைய உள்ளுர் அதிகார சபையிடமிருந்து இணக்கச் சான்றிதழிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் கூட்டு ஆதன வீட்டு வழங்கலாக உள்ளவிடத்து கூட்டு ஆதன வீடுகளின் வழங்கல் மீதான பெறுமதி சேர் வரியினை விலக்களித்தல். |

## தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி

| | | |
|---|---|---|
| 2019 ஒத்தோபர் 23 | - | சிகரெட்டுகள் மீதான விலக்களிப்பு அகற்றப்பட்டது. |
| | - | கட்டுமாண துணை ஒப்பந்தகாரர்களினால் வழங்கப்படும் பணிகள் மீது ஏற்புடைய விலக்களிப்பு பிரதான கட்டுமாண ஒப்பந்தக்காரர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. |
| | - | வெட்டி மெருகூட்டப்பட்ட பின்னர் மீள் ஏற்றுமதிக்காக கரடுமுரடான பதப்படுத்தாத இரத்தினக் கற்களின் இறக்குமதியானது அத்தகைய பணிகளின் கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்திலிருந்து இலங்கைக்கு பணவலுப்பல் செய்யப்படுகின்றதாயின் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் அனுமதியின் மீது தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - | சுற்றுலாப் பயண விடுதிகளுக்கான வெளிநாட்டு நாணயப் பெறுகைகள் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - | லுசேர்னா (அல்பல்பா) உணவு மற்றும் உருண்டைகளின் இறக்குமதி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - | உள்நாட்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட தாவர எண்ணெய் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - | மகிழ்வு அல்லது விளையாட்டு நோக்கங்களுக்கான உள்ளாசப் படகு மற்றும் ஏனைய கலங்கள் இறக்குமதி இறக்குமதி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |

- ஐ.அ.டொலர் 50 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட முதலீட்டுடன் கூடிய கருத்திட்டங்கள் மூலமான பொருட்கள் இறக்குமதி, கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் காலப்பகுதியின் போது அல்லது கட்டடவாக்க காலப்பகுதியின் போது தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

## கலால் தீர்வை

2019 மாச்சு 06

- அற்ககோல் கொள்ளளவின் அடிப்படையில் கொண்ட வெறியக் குடிவகைகள் மீதான கலால் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது;

| வகை | முன்னைய வரி வீதம் (அற்ககோல் லீற்றர் ஒன்றிற்கு ரூ.) | தற்போதைய வரி வீதம் (அற்ககோல் லீற்றர் ஒன்றிற்கு ரூ.) |
|---|---|---|
| விசேட சாராயம் | 3,300 | 3,300 |
| ஏனைய சாராயம் | 3,300 | 3,550 |
| இலங்கையில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானம் | 3,300 | 3,550 |
| 5 சதவீதத்திற்கு குறைவான பியர் | 2,400 | 2,700 |
| 5 சதவீதத்திற்கு கூடுதலான பியர் | 2,400 | 2,700 |
| உள்ளூர் வைன் | ரூ.100/தொகை லீற்றருக்கு | ரூ.600/சரியான லீற்றருக்கு |

- இறக்குமதி செய்யப்பட்ட வெறியக் குடிவகைகள் மீதான கலால் தீர்வை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது;
    - மோல்ட் வெறியக் குடிவகையின் (பியர்) மீதான கலால் தீர்வையானது லீற்றரொன்றிற்கு ரூ.50 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.55 ஆக அதிகரிக்கப்பட்டது.
    - வைன் மீதான கலால் தீர்வையானது லீற்றரொன்றிற்கான ரூ.100 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.110 ஆக அதிகரிக்கப்பட்டது.
    - ஏனைய வெறியக் குடிவகைகள் மீதான கலால் தீர்வையானது லீற்றரொன்றிற்கான ரூ.200 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.215 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## கலால் (சிறப்பு ஏற்பாடுகள்)

2019 மாச்சு 06

- சிகரெட் மீதான கலால் தீர்வையானது 12 சதவீதத்தால் பின்வருமாறு அதிகரித்துள்ளது.

| வகை | தற்போதைய வரி வீதம் (1,000 குச்சிகளுக்கு ரூ.) |
|---|---|
| 60 - 67 மி.மீற்றர் | 19,500 |
| 67 - 72 மி.மீற்றர் | 23,000 |
| 72 - 84 மி.மீற்றர் | 37,580 |
| > 84 மி.மீற்றர் | 42,200 |

- இனிப்பு குடிபானங்கள் மீதான கலால் தீர்வையானது மிகையான விலக்களிப்பு அளவுகளில் சீனியின் கிறாமொன்றிற்கான 30 சதத்திலிருந்து சீனியின் கிறாமொன்றிற்கு 40 சதமாக அதிகரித்துள்ளது
- சீனியை உள்ளடக்கிய குடிபானங்களின் விலக்களிப்பு அளவுகள் பின்வருமாறு குறைக்கப்பட்டது.
    - காபனேற்றிய குடிபானங்கள் 100 மில்லி லீற்றரிற்கு 6 கிராமிலிருந்து 100 மில்லி லீற்றருக்கு 4 கிறாமுக்கு

- பழவகையை அடிப்படையாகக் கொண்ட குடிபானங்கள் 100 மில்லி லீற்றருக்கு 9 கிறாமிலிருந்து 100 மில்லி லீற்றருக்கு 8 கிறாமுக்கு

- தாவர எண்ணெய் கொழுப்பு அமிலங்கள் மீதான கலால் தீர்வையானது பின்வருமாறு குறைக்கப்பட்டது.

  - தாவர எண்ணெய் கொழுப்பு அமிலங்கள் 25 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு

  - ரலோ கொழுப்பு அமிலங்கள் 25 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு

- குளிரூட்டிகள் மீதான கலால் தீர்வையானது 17 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

- இயந்திரங்களுடன் இணைக்கப்பட்ட அடிச்சட்டங்களுடன் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் மீதான கலால் தீர்வையானது ரூ 700,000 இலிருந்து ரூ 500,000 இலிருந்து குறைக்கப்பட்டது.

- 2,000 கன சென்ரி மீற்றருக்கு குறைந்த இயந்திர இயலளவுடனான மோட்டார் வாகனங்கள் மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

- இறந்தவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் கலப்பு, இயந்திர வான்கள் மற்றும் ஒற்றை வாடகை கார்கள் என்பவற்றின் மீதான கலால் தீர்வையானது குறைக்கப்பட்டது.

- 2,000 கிலோ கிறாமிற்கு குறைவான இயலளவினை உடைய சரக்கு ஏற்றிச் செல்லும் பாரவூர்திகள் மீதான கலால் தீர்வை குறைக்கப்பட்டது.

2019 மே 13 - ஒவ்வொன்றும் 72 மி.மீற்றரை விஞ்சுகின்ற ஆனால் 84 மி.மீற்றரை விஞ்சாத நீளத்திலுள்ள சிகரெட்டுக்கள் மீதான கலால் வரி 1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.37,580 இலிருந்து 1000 சிகரெட்டுகளாக ரூ.37,600 ஆக அதிகரிக்கப்பட்டது.

2019 யூலை 11 - ஒவ்வொன்றும் 67 மி.மீற்றரை விஞ்சுகின்ற ஆனால் 72 மி.மீற்றரை விஞ்சாத நீளத்திலுள்ள சிகரெட்டுக்கள் மீதான கலால் வரி 1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.23,000 இலிருந்து 1000 சிகரெட்டுகளாக ரூ.37,600 ஆகக் அதிகரிக்கப்பட்டது.

2019 ஒத்தோபர் 15 - ஒவ்வொன்றும் 67 மி.மீற்றரை விஞ்சுகின்ற ஆனால் 72 மி.மீற்றரை விஞ்சாத நீளத்திலுள்ள சிகரெட்டுக்கள் மீதான கலால் வரி 1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.37,600 இலிருந்து 1000 சிகரெட்டுகளாக ரூ.33,000 ஆகக் குறைக்கப்பட்டது.

## சுங்கத் தீர்வை

2019 சனவரி 12 - பெற்றோல் (92 ஒக்டென்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.20 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.19 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.16 ஆகும்.

- தன்னியக்க டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ. 5 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.3 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.2.85 ஆகும்.

2019 மாச்சு 06 - பதனிப்படாத ஏதெயில் அல்ககோல் மீதான சுங்கத் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.200 இனால் ரூ.1,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | - | பந்தய ஊர்தி மற்றும் பந்தய ஊர்திகளின் சக்கரங்களின் இறக்குமதி மீதான 30 சதவீதமான சுங்கத் தீர்வை நீக்கப்பட்டது. |
| | - | தெரிவுசெய்யப்பட்ட 261 வகையான பொருட்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை அலகு வீதம் 10 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. |
| 2019 யூன் 12 | - | சிறப்பு டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை லீற்றரொன்றுக்கு ரூ.10.55 இலிருந்து ரூ.15 ஆகக் அதிகரிக்கப்பட்டதுடன் லீற்றரொன்றுக்கு ரூ.1 தீர்வை தளர்த்தல் விதிக்கப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றுக்கு ரூ.14 ஆகும். |
| | - | பெற்றோல் இறக்குமதி மீதான (92 ஒக்டென்) சுங்கத் தீர்வை தளர்த்தல் லீற்றரொன்று ரூ.19 இலிருந்து லீற்றரொன்று ரூ.18 ஆகக குறைக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய தீர்வை லீற்றரொன்றுக்கு ரூ.17 ஆகும். |
| 2019 யூலை 11 | - | சிறப்பு டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் மீளப்பெறப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய சுங்கத் தீர்வை வீதம் லீற்றரொன்று ரூ.15 ஆகும். |
| 2019 செத்தெம்பர் 11 | - | பெற்றோல் இறக்குமதி (92 ஒக்டென்) மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் லீற்றரொன்று ரூ.18 இலிருந்து லீற்றரொன்று ரூ.17 ஆகக் குறைக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய தீர்வை லீற்றரொன்றுக்கு ரூ.18 ஆகும். |
| 2019 செத்தெம்பர் 28 | - | இறக்குமதி செய்யப்பட்ட பழவர்க்க குடிவானங்கள் மீது பிரயோகிக்கக்கூடிய சுங்கத்தீர்வை திருத்தம் செய்யப்பட்டது. |

## செஸ்

| | | |
|---|---|---|
| 2019 மாச்சு 06 | - | உலர்ந்த பழங்கள், உடன் அல்லது உலர்ந்த விதைகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட அல்லது மறுசீரமைப்புச் செய்யப்பட்ட குளிர்சாதனப் பெட்டி உறை நிலைகள் என்பன செஸ் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - | ரெண்டு இலைகள் (பீடீ இலைகள்) மீது பிரயோகிக்கப்படும் செஸ் தீர்வையானது கி.கிறாமொன்றிற்கு ரூ.2,500 இலிருந்து ரூ.3,500 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | மோட்டார் வாகன உதிர்ப்பாகங்கள், உக்கக்கூடியதும் மற்றும் உரமாக்கக்கூடியதுமான பிளாத்திக்குகள் மீதான செஸ் தீர்வைகள் திருத்தப்பட்டன. |
| 2019 ஒத்தோபர் 03 | - | இலங்கை முதலீட்டுச் சபை ஒப்பந்தமொன்றினைக் கைச்சாத்திட்டுள்ள அத்துடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்துள்ள ஏதேனும் சுற்றுலா தொழில்முயற்சி மூலமான தளபாட இறக்குமதி செஸ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - | 2019 மாச்சு 06 அன்று அல்லது அதற்கு பின்னர் கருத்திட்டமொன்றில் ஐ.அ.டொலர் 50 மில்லியன் அல்லது அதற்கு மேல் முதலிடுகின்ற ஏதேனும் தொழில்முயற்சி மூலமான பொருட்கள் இறக்குமதிகள் மீது சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் காலப்பகுதியின் போது அல்லது நிருமாண காலப்பகுதியின் போது ஆனால் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் செஸ் விலக்களிக்கப்பட்டது. |
| | - | காலநிலை கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியசாலை வசதியினை/ குளிரூட்டல் சங்கிலி ஏற்பாட்டுச் சேவைகள் உட்கட்டமைப்பினை நிறுவுவதற்கான கருத்திட்டமொன்றில் முதலிடுகின்ற ஏதேனும் தொழில்முயற்சி மூலமான பொருட்கள் இறக்குமதி மீதான செஸ் நிதியமைச்சின் செயலாளர் மூலமான பொருட்கள் அட்டவணையின் அனுமதிக்குட்பட்டு சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் காலப்பகுதியின் போது அல்லது நிருமாணக் காலப்பகுதியின்போது ஆனால் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் 3 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப்பட்டது. |

## சிறப்புப் பண்டத் தீர்வை

பல பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை பின்வருமாறு மீள்திருத்தப்பட்டது.

| திகதி | பிரயோகிக்கத்தக்க பொருள் | திருத்தம் |
|---|---|---|
| 2019.01.04 | உழுந்து | 6 மாத காலப்பகுதியினைக் கொண்ட காலப்பகுதிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.125 இலிருந்து ரூ.200 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 2019.02.02 | கொண்டைக் கடலை, (முழுமையான மற்றும் உடைக்கப்பட்ட), சிவப்புப் பருப்பு (முழுமையான மற்றும் உடைக்கப்பட்ட), மஞ்சள் பருப்பு (முழுமையாதன மற்றும் உடைக்கப்பட்ட) பீற் சீனி, கரும்புச் சீனி, வெள்ளைப் பளிங்குருவான கரும்புச் சீனி மற்றும் வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி | ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.02.08 | உருளைக்கிழங்கு | மூன்று மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.20 இலிருந்த ரூ.50 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2019.02.09 | சோளம் | ஆறு மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிக்கு ரூ.10 இலிருந்து ரூ.20 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2019.02.25 | காய்கறி எண்ணெய் | ஒரு வருடகாலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.03.03 | பெரிய வெங்காயம் | 3 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.05.08 | நெத்தலி, கருவாடு, உருளைக்கிழக்கு, பச்சைப்பயறு, மங்குஸ்தான் (உடன் மற்றும் உலர்ந்த) தோடம்பழம் (உலர்ந்த), பெயார்ஸ், செர்ரி, உலர்ந்த திராட்சை மற்றும் திராட்சை, கிவிப் பழம், | 6 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.05.21 | சின்ன வெங்காயம் பட்டாணிக்கடலை (முழுமையான மற்றும் உடைக்கப்பட்ட) பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்ந்த) திராட்சை, (உலர்ந்த) சீரகம், பெருஞ்சீரகம், மாஜரீன் | ஒருவருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.05.22 | பெரிய வெங்காயம் | 6 மாத காலப்பகுதிக்கு கிலோ ஒன்றுக்கு ரூபா 20 இலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.40 ஆகக் காணப்பட்டது. |
| 2019.07.04 | உழுந்து | ஒரு வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.07.11 | பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்ந்த) | 31 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.60 இலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.80 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | தோடம்பழம் (உடன்) | 31 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.65 இலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ. 80 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | அப்பிள் (உடன்) | 31 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.45 இலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.60 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | காய்கறி எண்ணெய் | 31 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2019.07.19 | மாசி, மிளகாய், கொத்தமல்லி விதைகள், மஞ்சள், உழுந்து மா, துருவிய மாவாக்கப்பட்ட பாற்கட்டித் துண்டுகள் மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் | ஒருவருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.08.02 | கொண்டைக்கடலை (முழுமையானது மற்றும் உடைத்தது) சிவப்புப் பருப்பு (முழுமையானது மற்றும் உடைத்தது), மஞ்சள் பருப்பு (முழுமையானது மற்றும் உடைத்தது), பீற் மற்றும் கரும்புச் சீனி, வெள்ளை பளிங்குருவான கரும்புச் சீனி, வெள்ளை பளிங்குருவான பீற் சீனி, | 6 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.08.09 | சோளம் | ஆறு மாத காலப்பகுதிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.20 இலிருந்து ரூ.10ஆகக் குறைக்கப்பட்டது. |
| 2019.08.11 | பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்ந்த) தோடம்பழம் உடன் மற்றும் உலர்ந்த) அப்பிள் (உடன்) காய்கறி எண்ணெய் | 3 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.09.08 | மெக்கரல், தட்டைப்பயறு மற்றும் குரக்கன் | 6 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.09.11 | உழுந்து | 6 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.10.01 | மீன் (உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைந்த) யோகட், வெண்ணெய், பால் சார்ந்த தடவு பொருட்கள், உள்ளி, திராட்சை (உடன்), வெந்தயம், குரக்கன் மா, நிலக்கடலை (தோலுடன்), கடுகு மற்றும் உப்பு | ஒரு வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.10.03 | பெரிய வெங்காயம் | 31நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.40 இலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.1 ஆகக் குறைக்கப்பட்டது |

## துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை

2019 மாச்சு 06 - சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்பதற்கும் உள்நாட்டு தயாரித்தல் கைத்தொழிலின் முற்பண செலவினைக் குறைப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை 7.5 இலிருந்து 2.5 ஆகக் குறைக்கப்பட்டது.

- தையல் இயந்திரங்கள் மற்றும் அரைத்தல் அல்லது பொலிவாக்குதலுடன் தொடர்பான இயந்திரங்கள் மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.

- லுசேர்னா (அல்பல்பா) மற்றும் பெல்லட்ஸ் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.

- ஏதேனும் முதலீட்டுச் சபை கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்ட மகிழ்வான அல்லது பயணத்திற்கான கப்பல்கள் மற்றும் கப்பல்களுடன் தொடர்பானவை விற்கப்படும் போதும் இன்னொரு முதலீட்டுச் சபைக் கம்பனிக்கு அத்தகைய கப்பல்கள் மற்றும் கப்பல்களுடன் தொடர்புபட்ட அதன் வியாபாரங்களுக்கு வாடகைக்குவிடும் போதும் விதிக்கப்படும் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.

2019 மே 07 - பாதுகாப்பு உபகரணங்கள் இறக்குமதி துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

2019 யூன் 01 - தெரிவுசெய்யப்பட்ட மின்சார இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை 7.5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

2019 செத்தெம்பர் 25 - 2019 மாச்சு 06 அன்று அல்லது அதற்கு பின்னர் கருத்திட்டமொன்றில் ஐ.அ.டொலர் 50 மில்லியன் அல்லது அதற்கு மேல் முதலிடுகின்ற ஏதேனும் தொழில்முயற்சி மூலமான பொருட்கள் இறக்குமதிகள் மீது சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் கருத்திட்ட நடைமுறை காலப்பகுதியின் போது அல்லது நிருமாண காலப்பகுதியின் போது ஆனால் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை விலக்களிக்கப்பட்டது.

- காலநிலை கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியசாலை வசதியினை/ குளிரூட்டல் சங்கிலி ஏற்பாட்டுச் சேவைகள் உட்கட்டமைப்பினை நிறுவுவதற்கான கருத்திட்டமொன்றில் ஏதேனும் தொழில்முயற்சி மீதான பொருட்கள் இறக்குமதி மீது நிதியமைச்சின் செயலாளரின் மூலமான பொருட்கள் அட்டவணையின் அனுமதிக்குட்பட்டு சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் கருத்திட்ட நடைமுறைக்கிடப்பட்ட காலப்பகுதியின் போது அல்லது நிருமாணக் காலப்பகுதியின்போது ஆனால் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மூன்று ஆண்டுகளுக்கு துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை விலக்களிக்கப்பட்டது.

- தெரிவுசெய்யப்பட்ட 368 பொருட்கள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை 7.5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டதுடன் தெரிவுசெய்யப்பட்ட ஆறு பொருட்கள் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

## உந்து ஊர்திகள் மீதான ஆடம்பர வரி

2019 மாச்சு 06 - இயந்திர கொள்ளளவின் அத்துடன் ஆடம்பர வரியற்ற எல்லைகளை விஞ்சுகின்ற தொகையின் அடிப்படையில் இறக்குமதிசெய்யப்பட்ட ஊர்திகள் மீது செலவு காப்புறுதி கப்பற்செலவு பெறுமதியிலும் உள்நாட்டில் ஒன்றுசேர்க்கப்பட்ட ஊர்திகள் தொடர்பில் தயாரிப்பாளரின் விலையிலும் ஆடம்பர வரியினை பின்வருமாறு விதிப்பதற்கு 2113/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

| வாகனத்தின் வகை | இயந்திரக் கொள்வனவு | ஆடம்பர வரியற்ற எல்லை | வீதம் (அ) |
|---|---|---|---|
| டீசல் | x > 2300 கன செ.மீ | ரூ.3.5 மில்லியன் | 120% |
| பெற்றோல் | x > 1800 கன செ.மீ | ரூ.3.5 மில்லியன் | 100% |
| கலப்பு டீசல் | x > 2300 கன செ.மீ | ரூ.4.0 மில்லியன் | 90% |
| கலப்பு பெற்றோல் | x > 1800 கன செ.மீ | ரூ.4.0 மில்லியன் | 80% |
| மின்னியல் | x > 200 கி.வா | ரூ.6.0 மில்லியன் | 60% |

(அ) ஆடம்பர வரியற்ற எல்லை மற்றும் எஞ்சின் கொள்ளளவினை விஞ்சிய தொகை மீது பிரயோகிக்கப்படும்.

2019 ஒத்தோபர் 23 - உந்து ஊர்திகள் மீதான ஆடம்பர வரிக்கான இயந்திரக் கொள்ளளவின் பிரயோகிப்பு அகற்றப்பட்டதுடன், உந்து ஊர்திகள் மீதான ஆடம்பர வரி, செலவுக் காப்புறுதி கப்பற் கட்டணம் பெறுமதியில் அல்லது உள்நாட்டில் ஒன்றுசேர்க்கப்பட்ட வாகனங்கள் தொடர்பில் தயாரிப்பாளரின் விலையில் ஆடம்பர வரியற்ற அடிப்படை அளவினை விஞ்சுகின்ற தொகையினை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்படவுள்ளது.

## காபன் வரி

2019 சனவரி 01 - 2018ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் ஊர்திகள் மீது விதிக்கப்பட்ட காபன் வரி பின்வருமாறு:

| வாகனத்தின் வகை | வாகனத்தின் வயது/ வீதம் | | |
|---|---|---|---|
| | 5 ஆண்டுகளுக்குக் குறைந்த | 5 இலிருந்து 10 ஆண்டுகள் வரையான | 10 ஆண்டுகளுக்கு கூடிய |
| கலப்பு (பெற்றோல்/டீசல் | கன சென்றி மீற்றர் ஒன்றிற்கு 25 சதம் | கன சென்றி மீற்றர் ஒன்றிற்கு 50 சதம் | கன சென்றி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.00 |
| எரிபொருள் (பெற்றோல்/டீசல்) | கன சென்றி மீற்றர் ஒன்றிற்கு 50 சதம் | கன சென்றி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.00 | கன சென்றி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.50 |
| பயணிகள் பேரூந்து | ரூ.1,000 | ரூ.2,000 | ரூ.3,000 |

2019 ஒத்தோபர் 23 - 2019 திசெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் காபன் வரி நீக்கப்படும்.

## பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வை

| | | |
|---|---|---|
| இனிவரவிருப்பவை | - | ரூட்ஜினோ விளையாட்டினைத் தவிர ஏனைய விளையாட்டுக்களை நடத்துகின்ற வியாபாரங்கள் மீதான வருடாந்தத் தீர்வையினை ரூ.200 மில்லியனிலிருந்து ரூ.400 மில்லியனுக்கு அதிகரித்தல் |
| | - | ரூட்ஜினோ விளையாட்டினை நடாத்துகின்ற வியாபாரங்கள் மீதான வருடாந்தத் தீர்வையினை ரூ.1 மில்லியனாக விதித்தல் |
| | - | தனிநபர் ஒருவருக்கான கசினோவின் நுழைவுக் கட்டணம் ஐ.அ.டொலர் 100 இலிருந்து ஐ.அ.டொலர் 50இற்குக் குறைத்தல் |
| | - | மொத்தச் சேகரிப்பு மீதான கட்டணங்கள் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரித்தல். |

## ஏனைய வரிகளும் மற்றும் தீர்வைகளும்

| | | |
|---|---|---|
| 2019 ஏப்பிறல் 01 | - | வானூர்தி அல்லது கப்பல் மூலம் இலங்கையில் இருந்து செல்லுகின்ற நபர்களுக்கு பயணி ஒருவருக்கு ஐ.அ.டொலர் 10 இலிருந்து ஐ.அ.டொலர் 60 ஆக கப்பலேறும் தீர்வை அதிகரிக்கப்பட்டது. |
| 2019 ஓகத்து 01 | - | பயணி ஒருவருக்கு ஐ.அ.டொலர் 60ஆக கப்பலேறும் தீர்வையில் அதிகரிப்பு நடைமுறைக்குவரும் திகதி 2020 பெப்புருவரி 01 ஆக மாற்றம் செய்யப்பட்டது. |
| 2019 ஒத்தோபர் 23 | - | 5 ஜீ செயற்பரப்பினை வழங்குகின்ற கோபுரங்கள் செலுலர் கோபுர தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - | பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்வதற்கு இலத்திரனியல் நிதி மாற்றல் அட்டைகளை (பற்று மற்றும் கடன் அட்டைகள் இரண்டும்) பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு கொடுப்பனவுகள் மீது 3.5 சதவீதம் கொண்ட வீதத்தில் வெளிநாட்டு வர்த்தக கொடுக்கல்வாங்கல் மீதான தீர்வையொன்று விதிக்கப்பட்டது. தீர்வையின் நடைமுறைப்படுத்தல் திகதி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் நிதியமைச்சரினால் பிரகடனப்படுத்தப்படும். |

## ஏனைய கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்

| | | |
|---|---|---|
| 2019 யூன் 01 | - | கடவுச்சீட்டு செயன்முறைப்படுத்தல் கட்டணத்தினைப் பின்வருமாறு திருத்துதல்.<br>- அலகு ஒன்றிற்கான திருத்தக் கட்டணம் ரூ.500 இலிருந்து ரூ.1,000 இற்கு<br>- அலகு ஒன்றிற்கான செயன்முறைப்படுத்தல் கட்டணம் (அவசர அடிப்படையில்) ரூ.10,000 இலிருந்து ரூ.15,000 இற்கு<br>- மூன்று வருட காலப்பகுதியொன்றுக்கு 16 வயதை விடக் குறைந்த பிள்ளைகளுக்கு செல்லுபடியாகும் கடவுச்சீட்டினை வழங்குவதற்கு அலகொன்றிற்கு ரூ.5,000 இலிருந்து ரூ.7,500 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | - | அலகு ஒன்றிற்கான செயன்முறைப்படுத்தல் கட்டணம் (சாதாரண அடிப்படையில்) ரூ.3,000 இலிருந்து ரூ.3,500 இற்கு<br>- மூன்று வருட காலப்பகுதியொன்றுக்கு 16 வயதைவிடக் குறைந்த பிள்ளைகளுக்கு செல்லுபடியாகும் கடவுச்சீட்டினை வழங்குவதற்கு அலகொன்றிற்கு ரூ.2,000 இலிந்து ரூ.2,500 இற்கு |

## அரசாங்கச் செலவினம்

| | | |
|---|---|---|
| 2019 மாச்சு 14 | - | 2018 பெப்புருவரி 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் கட்டடக்கலை தொழில்சார் நிபுணர்களுக்கான பட்டயம்பெற்ற கட்டடக் கலைஞர் படிக் கொடுப்பனவுக்கான பொது நிருவாக சுற்றறிக்கை இல 04/2018 (I) வெளியிடப்பட்டது |
| 2019 ஏப்பிறல் 22 | - | 2019 யூலை 01 ஆம் திகதி நடைமுறைக்கு வகையில் அனைத்து அரச துறை ஊழியர்களுக்கும் இடைக்காலப் படிக் கொடுப்பனவொன்றாக மாதமொன்றுக்கு ரூ.2,500 இனை வழங்குவதற்கு பொது நிருவாக சுற்றிக்கை இல 09.'.2019 வெளியிடப்பட்டது. |
| 2019 மே 31 | - | ஓய்வுபெறும் காலத்தில் ஓய்வூதியரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைச் சம்பளத்திற்கான 03/2016ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கையில் முதல் இரண்டு பகுதிகளையும் ஒன்றிணைக்கும் பொருட்டு 2019 யூலை 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கு பொது நிருவாக சுற்றறிக்கை இல. 14/2019 வெளியிடப்பட்டது. |
| 2019 யூன் 17 | - | அனைத்து செலவிடுகின்ற முகவராண்மைகளும் தமது மூலதனச் செலவினத்தினை 15 சதவீதத்தினால் குறைப்பதற்கும் நடைமுறைச் செலவினத்தினைக் குறிப்பாக மின்சாரம், தொலைபேசி, நீர்வழங்கல், எரிபொருள் நுகர்வு மற்றும் காகிதாதிகள் என்பன மீதான செலவினத்தினைச் சீரமைப்பதன் ஊடாக குறைப்பதற்கும் அறிவுறுத்தி தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 04/2019 வெளியிடப்பட்டது. |
| 2019 செத்தெம்பர் 24 | - | முன்னுரிமையற்ற செயற்றிட்டங்கள், புதிய செயற்றிட்டங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் கொள்வனவு என்பனவற்றை காலங்கடத்துவதன் மூலம் அனைத்து செலவிடுகின்ற முகவராண்மைகளும் தமது மூலதன செலவினத்தை மேலும், 10 சதவீதத்தால் குறைப்பதற்கு அறிவுறுத்தி தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல.05/2019 வெளியிட்டது. |
| இனிவரவிருப்பவை | - | அரசாங்க சேவையில் சம்பள முரண்பாடுகளைச் சீரமைப்பதற்கு 2020 சனவரியில் இருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மாதமொன்றுக்கு ரூ.3,000 கொண்ட குறைந்தபட்ச தொகையினாலும் ரூ.24,000 கொண்ட உயர்ந்தபட்ச தொகையினாலும் அனைத்து அரசாங்கத் துறை ஊழியர்களினதும் மாதாந்தச் சம்பளம் அதிகரிக்கப்படுகிறது. |

## படுகடன் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 2019 சனவரி 27 | - | திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீடுகளின் அடிப்படை அளவு திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மொத்த வெளிநின்ற இருப்பின் 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. |
| 2019 ஏப்பிறல் 11 | - | 2019-2023 காலப்பகுதிக்காக நிதியமைச்சினாலும் மத்திய வங்கியினாலும் தொகுக்கப்பட்ட நடுத்தர கால படுகடன் உபாயம் வெளியிடப்பட்டது. |
| 2019 யூலை 09 | - | 2018இன் 8ஆம் இலக்க தீவிரப்பொறுப்பு முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் ரூ.480 பில்லியன் வரை திரட்டுவதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டது. |

## ஏனையவை

| | | |
|---|---|---|
| 2019 பெப்புருவரி 14 | - | நாணயத் தரகு வியாபாரங்கள் மீதான கட்டுப்பாடுகளின் வரையறைகள், உள்ளக கட்டுப்பாடுகள் அறிக்கையிடல் தேவை மற்றும் புத்தகங்களைப் பரிசோதித்தல் என்பனவற்றில் பொருந்துகின்ற மற்றும் பொருத்தமான தேவைப்பாடுகள் மீதான 2018 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணயத் தரகு திருத்துவதற்கு 2019ஆம் ஆண்டின் 01 இலக்க நாணய தரகு ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டது. |